දුරකථන / தொலைபேசி / Telephone ) 0112669192 ,0112675011 0112698507 , 0112694033 ) 0112675449 ,0112675280
ෆැක්ස් / பெக்ஸ் / Fax ) 0112693866 ) 0112693869 )0112692913
විද්‍යුත් තැපෑල / மின்னஞ்சல் முகவரி / e-mail )postmaster@health.gov.lk
වෙබ්අඩවිය / இணையத்தளம் ) www.health.gov.lk

මගේ අංකය / எனது இல / My No. ) CF / EXP / 07 / 2021
ඔබේ අංකය / உமது இல / Your No. : )
දිනය / திகதி / Date ) 2021.11..10

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA
සෞඛ්‍ය අමාත්‍යාංශය
சுகாதாரம் அமைச்சு
Ministry of Health

பொது சுற்றறிக்கை கடித இலக்கம் 02 - 108/2021

மாகாண சுகாதார செயலாளர்கள்,
பிரதிப் பணிப்பாளர்நாயகம் - இலங்கை தேசிய வைத்தியசாலை,
மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்கள்,
மத்திய அமைச்சின் கீழ் உள்ள சகல வைத்தியசாலைப் பணிப்பாளர்கள்,
பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர்கள்,
வைத்திய அதிகாரிகள்,
உரிய நிறுவனத் தலைவர்களிற்கும்

**சுகாதார அமைச்சில் வெளிக்கள / அலுவலக மயப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர்கள் வகை – சேவைப் பிரிவு 2 (MN - 05 - 2006 A) தரம் I பதவிகளின் பொருட்டான இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை – 2021 (முதலாவது தடவை)**

சுகாதார அமைச்சில் வெளிக்கள/அலுவலகமயப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர்கள் வகை - 2 சேவைப் பிரிவின் (MN-05-2006 A) பதவிகளின் தரம் I ற்கு பதவி உயர்வு ஐந்து வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் சித்தியடைய வேண்டிய இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடைபெறும் என இத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. பரீட்சை நடைபெறும் திகதி, இடம், நேரம் என்பன அனுமதி அட்டையில் குறிப்பிடப்படும்.

02. **தகைமைகள் :-**

சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சில் வெளிக்கள / அலுவலகமயப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர்கள் வகை - 2 சேவைப் பிரிவின் (MN - 05 - 2006 A) பதவிகளில் **(போஷணையாளர், மனநல மருத்துவ சமூக சேவையாளர், திட்டமிடல் மற்றும் நிகழ்சித்திட்ட உத்தியோகத்தர், மருத்துவ ஆவண உத்தியோகத்தர், புள்ளிவிபர ஆய்வு உத்தியோகத்தர், இருதய மற்றும் நுரையீரல் துடிப்பு வாசிப்பாளர்)** தரம் I ற்கு நியமனம் பெற்றுள்ள உத்தியோகத்தர்களும், இதுவரை இப் பரீட்சையினை பூரணப்படுத்தாத உத்தியோகத்தர்களும் மாத்திரம் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

**கவனிக்கவும் -: 2021.12.20 ஆம் திகதிக்கு முன்னர் தரம் Iற்கு பதவி நியமனம் பெற்றுள்ள உத்தியோகத்தர்கள் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.**

03. **விண்ணப்பங்கள் :-**

இச்சுற்றறிக்கையின் இறுதியிலுள்ள மாதிரிப்படிவத்திற்கமைய விண்ணப்பதாரியினால் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் நிறுவனத்தலைவரினூடாக பணிப்பாளர் (பரீட்சை), "சுவசிரிபாய", 385, வண.பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு - 10 எனும் முகவரியை 2021.12.20 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்திலும் தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என பிரிவுத்தலைவரினால் சான்றுப்படுத்தப்பட வேண்டும். தங்களது விண்ணப்பப் பத்திரத்துடன் விண்ணப்பதாரியின் முகவரியிடப்பட்ட **ரூபா.45** பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட **(9" X 4")** அளவுடைய கடித உறை 2 இணையும் (இதில் விண்ணப்பதாரி தனது சொந்த முகவரியினையோ, அல்லது அலுவலக முகவரியினையோ குறிப்பிடலாம்) இணைத்து அனுப்பிவைக்க வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத்திகத்திக்கு பின்னராக கிடைக்கும் விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிப்படும்.**

விண்ணப்பமானது A4 தாளின் இருபக்கங்களினையும் பயன்படுத்தி தயாரிக்கப்படவேண்டும். முதலாவது பக்கத்தில் 01 - 03 வரையான விபரங்களும், இரண்டாவது பக்கத்தில் 04 - 08 வரையான விபரங்களும் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும்.

04. **பரீட்சைக் கட்டணம்**

**4.1** முதன் முறையாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கட்டணங்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனைய விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு விடயத்திற்கும் ரூபா.25 வீதம் இரத்துச் செய்யப்படாத முத்திரையினை ஒட்டி அதன் மீது தமது கையொப்பத்தினை இட்டு இரத்துச் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

**4.2** எக் காரணத்தினைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணமானது வேறு பரீட்சைகளின் பொருட்டு மாற்றப்படுதலோ, அல்லது மீளப் பெறுதலோ மேற்கொள்ள இடமளிக்கப்படமாட்டாது.

05. **பரீட்சைக்கு உள்வாங்குதல்**

**5.1** ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் பொருட்டு விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்படும். அப் பரீட்சை அனுமதிப் பத்திரத்தினை உரிய முறையில் பூரணப்படுத்தி பரீட்சை குழுவின் தலைவரிடம் கையளிக்க வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளப்பட வில்லையாயின் பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

**5.2** பரீட்சையின் பொருட்டு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளின் பொருட்டு பரீட்சைக் குழுவின் தலைவருக்கு தங்களினது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுவதன் பொருட்டு கீழ் குறிப்பபிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றினை கொண்டு வருதல் வேண்டும்.

(அ) தேசிய அடையாள அட்டை
(ஆ) சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் ஏற்புடைய நிறுவனங்களினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை
(இ) வலுவிலுள்ள சாரதி அனுமதிப்பத்திரம்
(ஈ) வலுவிலுள்ள கடவுச் சீட்டு

06. **பரீட்சைத் திட்டம்**

இப் பரீட்சையானது நிலவரை ஆய்வு எனும் கட்டுரை வினாவினையுடைய எழுத்துப் பரீட்சை ஒன்றிற்கு தோற்ற வேண்டியதுடன் 07 வினாக்களில் 04ற்கு விடையளிக்க வேண்டும். ஒரு வினாத்தாளுக்கான நேரம் - 03 மணித்தியாலங்களாகும். மொத்தம் 100 புள்ளிகளைப் பெற வேண்டும். ஒவ்வொரு வினாத்தாளுக்கும் குறைந்தது 40% புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்

07. பாடத்திட்டம்

**நிலவரை ஆய்வு வினாத்தாள்**

உரிய விடயப்பரப்பு தொடர்பாக எழும் சிக்கலொன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவை தொடர்பாக தொடுக்கப்படும் வினாக்கள் சிலவற்றிற்கு விடையளிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதன்மூலம் விண்ணப்பதாரியின் தர்க்கிக்கும் ஆற்றல். ஆக்கத்திறன், சிக்கல்களை தீர்த்துக் கொள்ளும் தன்மை மற்றும் சரியான தீர்மானம் எடுப்பதற்கான இயலுமை மற்றும் கோட்பாட்டு அறிவினை பிரயோகித்தல் தொடர்பாக அவர்கள் கொண்டுள்ள புரிதல் என்பன பரீட்சிக்கப்படும்.

08. பரீட்சை தொடர்பான ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித்தல்.

பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினை பார்த்து எழுதுதலும் தடை செய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவி செய்தலை தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல், இலத்திரணியல் உபகரணங்களை பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்தி மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

09. தயவு செய்து இச்சுற்றறிக்கையில் உள்ள விடயங்களை உமது நிறுவனங்களிலுள்ள சகல (போஷணையாளர், உளவியல் மருத்துவ சமூக சேவையாளர், திட்டமிடல் மற்றும் நிகழ்சித்திட்ட உத்தியோகத்தர், மருத்துவ ஆவண உத்தியோகத்தர், புள்ளிவிபர ஆய்வு உத்தியோகத்தர், இருதய மற்றும் நுரையீரல் துடிப்பாளர்) தரம் I ற்கான அலுவலர்களுக்கும் அறியப்படுத்துவதற்கு ஒழுங்கினை மேற்கொள்ளவும்.

(இந்த விபரங்களை- **www.health.gov.lk** எனும் இணைய முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளமுடியும்)

குறிப்பு : இச்சுற்று நிருபத்தின் சிங்களம், தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புகளில் ஏதாவது ஒவ்வாமைகள் காணப்படின் சிங்கள மொழி மூல அறிவித்தலே வலுவுடையதாகும்.

**Chamika H. Gamage**
Deputy Director General (Administration) II
Ministry of Health
"Suwasiripaya"
Colombo 10.

சாமிக ஜீ கமகே
பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) II
செயலாளருக்காக
சுகாதார அமைச்சு

**EXP**

அலுவலக உபயோகத்தின் பொருட்டு

மாதிரி விண்ணப்பப் படிவம்

**சுகாதார அமைச்சில் வெளிக்கள / அலுவலக மயப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர்கள் வகை – சேவைப் பிரிவு 2 (MN - 05 - 2006 A) தரம் I பதவிகளின் பொருட்டான இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை – 2021 (இரண்டாவது தடவை)**

**01.** (அ) (i) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (தமிழில் எழுதவும்) : ..............................................

..........................................................................................................

(ii) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (ஆங்கில கப்பிட்டல் எழுத்தில்)

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |

(iii) முதலெழுத்துக்களுடன் பெயர் ( தமிழில்) ..............................................

..........................................................................................................

(iv) முதலெழுத்துக்களுடன் பெயர்( ஆங்கில கப்பிட்டல் எழுத்துக்களில்)

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |

(ஆ) (i) பதவி : ..........................................................................................

(ii) முதல் நியமனத் திகதி : ..............................................................

(iii) சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட திகதி, கடித இலக்கம் : ...............................

(iv) தற்போது பெறும் வருடாந்த சம்பளம் : ..................................................

(v) தரம் I ற்கு பதவி உயர்த்தப்பட்டுள்ள திகதி மற்றும் கடித இலக்கம் : ..................

(vi) கையடக்கத் தொலைபேசி இலக்கம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(vii) தேசிய அடையாள அட்டை இலக்கம்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

(viii) மின்னஞ்சல் முகவரி : ..........................................................................

**02.** (அ) தற்போது சேவை புரியும் நிறுவனம் **:**

(சிங்களத்தில்) ..........................................................................

(தமிழில்) ..............................................................................

(ஆ) சேவை நிலையம் நிர்வகிக்கப்படுவது மத்திய அரசினால் ☐

மாகாண சபையினால் ☐

(இ) அதற்குரிய மாவட்டம் : ..................................................................

பரீட்சை அனுமதி அட்டை அனுப்புவதன் பொருட்டு தெளிவாக விண்ணப்பதாரியினது முகவரியிடப்பட்ட 9”x4” அளவு ரூபா.45 பெறுமதியுடைய முத்திரை இடப்பட்ட கடித உறை இரண்டு இணைக்கப்பட்டு உள்ளதா? ..............................................

(ஈ) (i) தபால் முகவரி (சிங்களத்தில்) : ..................................................

(ii) தபால் முகவரி (ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில்) : ..............................

**03.** பரீட்சைக்கு தோற்றவுள்ள மொழி (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்): ..............................

**04.** (அ) இதற்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்றியுள்ளீரா? ..........................................................

(ஆ) அவ்வாறு தோற்றியிருந்தால் இந்த தடவை முத்திரை ஒட்டப்பட்டுள்ளதா?......................................

| முத்திரைக் கூண்டு |
| --- |

**05.** **விண்ணப்பதாரியின் உறுதியுரை**

(i) இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என்றும் இப் பரீட்சைக்கு நான் முதற்தடவையாக தோற்றுவதனால் பரீட்சைக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்றும் / முதற் தடவை அல்லாத படியால் ரூபா 25 பெறுமதியுடைய முத்திரை ஒட்டியுள்ளதாகவும் இம் முத்திரையானது விண்ணப்பப்படிவத்தில் ஒட்டி இரத்துச் செய்வதற்கு முன்னர் பாவிக்கப்படாத பெறுமதியுடைய முத்திரையெனவும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

(ii) சுகாதார திணைக்களத்தினால் பரீட்சைகள் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சட்ட திட்டங்களுக்கு அமைய செயற்படுவேன் என்றும், இப் பரீட்சை தொடர்பான பிரமாணங்களுக்கு அமைய நான் தகைமையற்றவனாக காணப்பட்டால் எனது பரீட்சார்த்தித் தன்மையினை இரத்துச் செய்தவற்கும் இது தொடர்பாக எடுக்கப்படும் எந்த தீர்மானத்திற்கும் இணங்குவேன் என்றும் இத்தால் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

திகதி : ............................ ......................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

**06.** **தனிநபர் கோவையினை கையாளும் விடய முகாமைத்துவ உதவியாளரின் உறுதியுரை**

இந்த விண்ணப்பம் பாரமேற்கப்படும் தினத்திற்கு முன்னர் என்னிடம் கிடைக்கப்பெற்தென்றும், தனிநபர் கோவையில் உள்ள தகவல்களுக்கு அமைய விண்ணப்பதாரி இந்த விண்ணப்பத்தை சரியாக பூரணப்படுத்தியுள்ளதாகவும், இந்த விண்ணப்பத்தில் பிரதி தனிநபர் கோவையில் கோவையிடப்பட்டுள்ளதென்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

........................ ....................................

திகதி பெயர், கையொப்பம்

**07.** **நிறுவனத் தலைவரின் கையொப்பம்**

திரு/திருமதி/செல்வி/செல்வன் .................................... என்பவரினை நான் நன்கு அறிவேன் என்றும் இவர் இப் பரீட்சைக்குத் தோற்றுவது முதற் தடவை ஆனபடியால் முத்திரை ஒட்ட தேவையில்லை என்றும் / முதற்தடவை அல்லாத படியால் ரூபா ..........முத்திரை ஒட்டப்பட்டுள்ளது என்றும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் இவருடைய சுயவிபரக் கோவைக்கு அமைவாக சரியானவை என்றும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரிய தகைமைகளினை இவர் பூத்தி செய்துள்ளார் என்றும் என் முன்னிலையில் தனது கையொப்பத்தினை இட்டார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: .............................. ........................................

திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(இறப்பர் முத்திரை இடப்பட வேண்டும்)

**08.** **பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு / விசேட பிரிவின் தலைவரின் உறுதிப்படுத்தல்**

திரு/திருமதி/செல்வி/செல்வன் .......................................... என்பவர் எனது நிறுவனத்தில் ...................................... உத்தியோகத்தராக பணியாற்றுகின்றார் என்னும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் சுயவிபரக் கோவைக்கு அமைய சரியானவை யென்றும், இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரிய தகைமைகளினை இவர் பூர்த்தி செய்துள்ளார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ................................ ..................................................

பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு / விசேட பிரிவு
தலைவரின் கையொப்பம்
(இறப்பர் முத்திரை இடப்பட வேண்டும்)